| Article Date | Headline / Summary | Publication |
|---|---|---|
| 29 Dec 2024 | Why is medical coverage important in overseas travel insurance? Here are 8 reasons..! | Nanayam Vikatan |




**ஆஷிஷ் சேத்தி,**
தலைவர் - மருத்துவம் & சுற்றுலா வணிக உத்தி,
பஜாஜ் அலையன்ஸ் ஜெனரல் இன்ஷூரன்ஸ்


# வெளிநாட்டுப் பயணம்... காப்பீட்டில் மருத்துவ கவரேஜ் ஏன் முக்கியம்? 8 காரணங்கள் இதோ..!

**வெளிநாட்டுப் பயணம் என்றாலே சிறியவர் முதல் பெரியவர்கள் வரையில் குதூகலம்தான். அது பொழுதுபோக்கு, வேலை, கல்வி, தொழில் நிமித்தமாக என எப்படி இருந்தாலும் நிச்சயம் ஒரு சிறப்பான அனுபவமாகவே நினைக்கின்றனர். வெளிநாட்டுப் பயணம் உற்சாகமான ஒன்றாக இருந்தாலும், அதில் சில எதிர்பாராத சவால்களும் இருக்கின்றன. குறிப்பாக, மருத்துவரீதியாக ஏற்படும் அவசர நிலைகள். சில சமயங்களில் அது எதிர்பாராத விதமாக ஏற்படும் விபத்துகள் மூலமாகக்கூட இருக்கலாம். மேலும், திடீரென ஏற்படும் உடல் நலப் பிரச்னைகள் பலவும் வெளிநாடுகளில் அதிகமான மருத்துவச் செலவுகளுக்கு வழிவகுக்கும். எனவே, வெளிநாட்டுப் பயணங்களுக்கான சர்வதேச பயணக் காப்பீட்டில் (International Travel Insurance) கட்டாயம் மருத்துவச் சிகிச்சைகளுக்கான கவரேஜ் இருப்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.**

கோவிட்-19 பரவலுக்குப் பிறகு, தொற்று நோய்கள் குறித்த விழிப்புணர்வு பெரிய அளவில் அதிகரித்துள்ளது. இது மருத்துவக் காப்பீடு எந்த அளவுக்கு அவசியம் என்பதை உணரவைத்துள்ளது.

**1. வெளிநாடுகளில் மருத்துவ செலவுகள் அதிகம்...**

அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளில், இந்தியாவைவிட மருத்துவச் செலவுகள் கணிசமாக அதிகம். உதாரணத்துக்கு அமெரிக்கா, ஐரோப்பா அல்லது ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில், ஒரு நாள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாலும் லட்சக்கணக்கில் செலவாகும். இது பயணத்தை மட்டும் திட்டமிட்டு வருபவர்களுக்கு மேற்கொண்டு பெரும் சுமையாக இருக்கும். சேமிப்பு மற்றும் கையிருப்பைக் கரைக்கக்கூடும். இன்னும் சிலரை கடன் வாங்கி செலவு செய்யும் நிலைக்குத் தள்ளிவிடலாம். ஆக சர்வதேச பயணக் காப்பீட்டில் மருத்துவச் செலவுகளுக்கான இழப்பீடு இருந்தால் இது போன்ற செலவுகளைத் தவிர்க்க முடியும்.

**2. அவசர நிலை மற்றும் மருத்துவமனை செலவுகள்...**

சர்வதேச பயணக் காப்பீடுகள், பொதுவாக அவசர மருத்துவ



சிகிச்சைகளுக்கும், எதிர்பாராமல் ஏற்படும் விபத்துக்கான சிகிச்சைகளுக்கும் கவரேஜ் அளிக்கிறது.

சர்வதேச பயணத்தின்போது ஏற்படும் உடல்நலப் பிரச்னையால் ஒருவர் உள் நோயாளியாக அல்லது வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றால், அதற்கு ஆலோசனை கட்டணம், எந்த மாதிரியான பிரச்னை என்பதைக் கண்டறிதல், ஆம்புலன்ஸ் கட்டணங்கள், மருந்துகளுக்கான கட்டணங்கள், அறுவைசிகிச்சை கட்டணங்கள் என அனைத்துக்கும் இழப்பீடு கிடைக்கும்.

மேலும், வெளிநாடுகளில் பயணிக்கும் இடங்களில் தேவையான மருத்துவ உதவிகள் கிடைக்காதபட்சத்தில், அருகிலுள்ள இடங்களுக்கு அல்லது இந்தியாவுக்குத் திரும்ப அனுப்பப்படுவதற்கான செலவுகளையும் காப்பீட்டில் க்ளெய்ம் செய்ய முடியும்.

உதாரணத்துக்கு, ஸ்விட்சர்லாந்தில் ஒரு பயணி பனிச்சறுக்கு விளையாடும்போது எலும்பு முறிவு ஏற்பட்டால், பயணக் காப்பீட்டின் மூலம் மருத்துவக் கட்டணங்கள், சிகிச்சை கட்டணங்கள், ஒருவேளை இந்தியா திரும்ப வேண்டிய சூழல் ஏற்பட்டால் அதற்கான பயணச் செலவுகள் ஆகியவற்றை இன்ஷூரன்ஸில் க்ளெய்ம் செய்துகொள்ளும் வசதி உள்ளது.

### 3. தொற்றுநோய் பாதிப்புக்குப் பாதுகாப்பு

கோவிட்-19 பரவலுக்குப் பிறகு, தொற்று நோய்கள் குறித்த விழிப்புணர்வு பெரிய அளவில் அதிகரித்துள்ளது. இது மருத்துவக் காப்பீடு எந்த அளவுக்கு அவசியம் என்பதை உணர வைத்துள்ளது. சில நாடுகளில் பயணம்

செய்ய பயணக் காப்பீட்டில் கோவிட்-19 கவரேஜ் கட்டாயம் என்கிற நிலை காணப் படுகிறது. இந்தப் பாலிசிகள் மூலம் ஒருவர் வெளிநாட்டில் இருக்கும்போது வைரஸ் தொற்றுக்கு ஆளானாலும், அவர்களுக்குத் தேவையான மருத்துவச் செலவுகளைச் சமாளிக்க உதவிகரமாக இருக்கிறது.

உதாரணத்துக்கு தாய்லாந்து, இந்தோனேஷியா மற்றும் ஐக்கிய அரபு நாடுகள் பயணிகளுக்குத் தொற்றுநோய் தொடர்பான பிரச்னைகளுக்கும் பாலிசியில் கவரேஜ் இருக்குமாறு கட்டாயமாக்கியுள்ளன.

**4. பணப் பரிமாற்ற பிரச்னை இல்லை...**

பல நாடுகளில் அவசர மருத்துவ உதவியாக இருந்தாலும்கூட, மருத்துவமனையில் அனுமதிக்கும்போது முன்கூட்டியே கணிசமான தொகையை பணமாகச் செலுத்த கூறுகின்றன. ஆனால், சர்வதேச பயண பாலிசிகள் பலவும் அதன் நெட்வொர்க் மருத்துவமனைகளில், பணம் கட்டாமல் மருத்துவ சேவை பெறுவதை உறுதி செய்கின்றன. அதாவது, இன்ஷூரன்ஸ் நிறுவனங்கள் நேரடியாகவே மருத்துவமனைகளுக்குச் செலுத்த வேண்டிய கட்டணங்களை செலுத்திவிடுகின்றன. ஆக, பணம் கட்டாமல் அனுமதிக்கும் மருத்துவமனைகளை முன்கூட்டியே தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

**5. தொலைதூர பகுதிகளில் உதவி...**

தொலைதூர பயணங்களில் பலரும் முன்பின் அறிந்திடாத, புதுப்புது சவாலான இடங்களுக்குப் பயணம் செய்வதில் பலரும் ஆர்வம் காட்டுகின்றனர். இது போன்ற சில இடங்களில் தேவையான மருத்துவ வசதிகள் இல்லாமல் இருக்கலாம். அந்த மாதிரியான சமயங்களில், பயணக் காப்பீட்டிலுள்ள மெடிக்கல் கவரேஜ் வசதி தேவையான உதவிகளை உடனடியாகப் பெற உதவிகரமாக இருக்கிறது.

இருக்கும் இடத்தில் சரியான மருத்துவ சேவை கிடைக்காத நிலையில், உடனடியாக அருகில் தேவையான மருத்துவ வசதிகள் உள்ள இடங்களுக்கு அழைத்து செல்ல இந்த கவரேஜ் உதவுகிறது.

துரதிர்ஷ்டவசமாக பாலிசிதாரர் ஏதேனும் ஒரு காரணத்தால் வெளிநாடுகளில் மரணம் அடைந்தால், அவர் உடலை இந்தியாவுக்கு எடுத்து வரும் செலவைக் காப்பீட்டுத் திட்டங்கள் வழங்குகின்றன.

உதாரணத்துக்கு, சாகச விளையாட்டில் ஈடுபடும்போது ஒருவர் நேபாள நாட்டில் அதிக காயமடைகிறார். அவரை உடனடியாக ஹெலிகாப்டர் மூலமாக காத்மாண்டுவுக்கு கொண்டு செல்ல ஆகும் செலவையும் காப்பீடுகள் வழங்குகின்றன. தொலைதூர சாகச பயணங்கள் செல்பவர்களுக்கு நிச்சயம் இது போன்ற உதவிகள் மிகப்பெரிய உதவிகரமாக இருக்கும்.

**6. ஏற்கெனவே இருக்கும் உடல் நலப் பிரச்னைகள்...**

பல பாலிசிகள் ஏற்கெனவே இருக்கும் உடல் நலப் பிரச்னைகளுக்கும் கூடுதல் பிரீமியத்துடன் கவரேஜ் அளிக்கின்றன. உதாரணத்துக்கு, நீரிழிவு நோய் அல்லது இதய நோய் உள்ள பயணிகள் போன்றவர்கள் மேற்கண்ட கவரேஜ் இருக்குமாறு பாலிசி எடுப்பது அவசியம். ஏனெனில், பயணத்தின் போது திடீரென அவருக்கு ஏதேனும் அவசர பிரச்னை ஏற்பட்டால் மருத்துவ சிகிச்சை பெற உதவிகரமாக இருக்கும்.

**7. விசாவுக்கு அவசியம் தேவை...**

ஐரோப்பாவின் ஷெங்கன் மண்டலத்தில் உள்ள சில நாடுகளுக்குச் செல்ல, பயணக் காப்பீட்டில் மருத்துவ கவரேஜ் இருக்க வேண்டியது கட்டாயம். ஒரு பயணி சுமார் 26 லட்சம் ரூபாய் வரையில் மருத்துவச் செலவுகளுக்கு கவரேஜ் இருக்குமாறு பாலிசி வைத்திருப்பது அவசியமாகிறது. அப்படி இல்லாவிட்டால் விசா மறுக்கப்படவும் வாய்ப்புள்ளது.

**8. மன அமைதியுடன் பயணிப்பது அவசியம்...**

சர்வதேச பயணிகளுக்கு பயணக் காப்பீடுகள் நிதி ரீதியாகப் பாதுகாப்பை வழங்குவதோடு அல்லாமல், பயணிகளுக்கு மன அமைதியையும் கொடுக்கின்றன. அவசர தேவைகளுக்குத் தேவையான உதவிகள் நிச்சயம் கிடைக்கும் சூழலில், பயணிகள் முழுவதுமாக அவர்களது பயணத்தில் கவனம் செலுத்த முடியும். எனினும், இந்தப் பயணக் காப்பீட்டில் மருத்துவ கவரேஜையும் சேர்ப்பது அவசியமாகிறது. அத்தகைய காப்பீட்டுத் திட்டத்தை சரியான முறையில் தேர்ந்தெடுக்க சில

அம்சங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**சரியான மருத்துவ கவரேஜை எப்படித் தேர்வு செய்ய வேண்டும்?**

**1. கவரேஜ் எவ்வளவு..?**

மருத்துவச் சிகிச்சைக்கான கவ்ரேஜ் தொகையை தேர்வு செய்யும்போது, அது நீங்கள் எதிர்பார்க்கும் தேவைக்குப் போதுமானதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அமெரிக்கா மற்றும் கனடா போன்ற நாடுகளில் மருத்துவச் செலவுகள் அதிகம் என்பதால், நீங்கள் செல்லவிருக்கும் நாட்டின் மருத்துவச் செலவை கருத்தில்கொள்ள வேண்டும். ஆக, முடிந்த அளவுக்கு பாலிசியில் மருத்துவ கவரேஜ் அதிகமாக இருப்பதைப் போன்று தேர்வு செய்ய வேண்டும்.

**2. எவற்றுக்கெல்லாம் இழப்பீடு கிடைக்கும்/ கிடைக்காது..?**

பாலிசி எடுக்கும் முன் நீங்கள் எடுக்கப்போகும் குறிப்பிட்ட பாலிசியில் என்னவெல்லாம் கவரேஜ் இருக்கும், எவற்றுக் கெல்லாம் கவரேஜ் கிடைக்காது என்பதை முழுமையாகத் தெரிந்து கொள்ள வேண்டும். உதாரணத்துக்கு, ஏற்கெனவே உள்ள உடல்நலப் பிரச்னைகள், சாகச விளையாட்டுகளால் ஏற்படும் ஆபத்துகள், தொற்றுநோய்கள் போன்றவற்றுக்கு கவரேஜ் இருக்கும் வகையிலான பாலிசியைத் தேர்ந்தெடுப்பது நல்லது.

**3. கேஷ்லெஸ் சிகிச்சைக்கு அனுமதி...**

பாலிசியைத் தேர்வு செய்யும்போதே எதிர்பாராமல் ஏற்படும் மருத்துவத் தேவைகளுக்கு, பணம் எதுவும் கட்டாமல் சேவை பெறும் வகையில் நெட்வொர்க் மருத்துவமனைகள் உள்ள பாலிசியாகப் பார்த்து தேர்வு செய்ய வேண்டும். இது அவசர காலகட்டங்களில் உடனடியாகப் பணம் செலுத்தியாக வேண்டும் என்ற நிலையில் இருந்து தப்பிக்க உதவும்.

**4. அவசர உதவி சேவை...**

அவசர சேவைக்கு 24 மணி நேரமும் சேவை வழங்கும் அதிக மருத்துவமனைகள் உள்ள பாலிசியைத் தேர்வு செய்ய வேண்டும். தேவையான மருத்துவ சேவைகள் கிடைக்காத பட்சத்தில் உடனடியாக இந்தியா திரும்ப ஆகும் செலவுகளைக் கவரேஜ் செய்யுமா என்பதையும் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

**5. பயணக் காலம்...**

பாலிசிதாரர்கள் பயணம் செல்லும் குறிப்பிட்ட காலம் முழுவதும் பாலிசி கவரேஜ் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். அதேபோல் பயணம் செய்யும் குறிப்பிட்ட நாடுகளையும் கவர் செய்வதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.



வெளிநாடு செல்லும் பயணிகளுக்கு சர்வதேச பயணக் காப்பீட்டில் மருத்துவ கவரேஜ் மிக அவசியம். இது எதிர்பாராத செலவுகளில் இருந்து தப்பிக்க உதவும். தேவையான சமயத்தில் தரமான மருத்துவ உதவிகளைப் பெற உதவும். இது நீங்கள் வேலைக்காக, தொழில் நிமித்தமாக அல்லது சுற்றுலா என எதற்காகச் சென்றாலும் பயணக் காப்பீட்டுடன் விரிவான மருத்துவ கவரேஜ் இருப்பதை உறுதி செய்துகொண்டால், நிதி ரீதியான பாதுகாப்பைப் பெறுவதோடு மட்டுமல்லாமல், மகிழ்ச்சியாக வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொள்ள உதவிகரமாக இருக்கும்.